Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 8.2.2025 நேரம் மாலை 6.10 மணி

--------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

30 ஆண்டுகளுக்குப் பிறகு பாஜக புதுடெல்லியில் ஆட்சி அமைக்க உள்ள நிலையில், இந்த வெற்றிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தல் வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வரும் நிலையில் திமுக வேட்பாளர் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார்.

நாடு முழுவதும் பொது தேர்வு எழுதவிருக்கும் மாணவர்களிடையே பிரதமர் திரு நரேந்திர மோடி 8-ஆவது முறையாக பரிக் ஷா பே சர்ச்சா நிகழ்வில் வரும் திங்கட்கிழமை கலந்துரையாடுகிறார்.

புதுச்சேரி அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை சார்பில் 35-ஆவது மலர், காய்,கனி கண்காட்சி தாவரவியல் பூங்காவில் நேற்று தொடங்கி நாளை 9-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

டெல்லியில் 70 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டன. டெல்லி சட்டப்பேரவை தேர்தலில் பாரதிக ஜனதா கட்சி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியை கைப்பற்றும் நிலையில் உள்ளது. மொத்தம் உள்ள 70 தொகுதிகளில் பிஜேபி 44 இடங்களில் வெற்றி பெற்றும் 4 இடங்களில் முன்னிலையில் உள்ளது. மேலும் ஆம் ஆத்மி கட்சி 21 இடங்களில் வெற்றி பெற்று ஒரு தொகுதியில் முன்னிலைப் பெற்றுள்ளது. மேலும் காங்கிரஸ் கட்சி எந்த

தொகுதியிலும் முன்னிலைப் பெறாமல் பின்னடைவை சந்தித்துள்ளது. ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சருமான திரு அரவிந்த் கெஜரிவால் புதுடெல்லி தொகுதியில் தோல்வி கண்டுள்ள நிலையில் அத்தொகுதியில் பிஜேபி வேட்பாளர் திரு பர்வேஷ் சாகிப்சிங் ஆயிரத்து 844 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

30 ஆண்டுகளுக்குப் பிறகு பாஜக புதுடெல்லியில் ஆட்சி அமைக்க உள்ளது குறிப்பிடத் தக்கது.

உத்தரபிரதேசத்தில் உள்ள மில்கிபூர் சட்டமன்றத் தொகுதியில் பாஜகவின் திரு சந்திரபானு பஸ்வான் வெற்றி பெற்றுள்ளார்.

புதுடெல்லி சட்டமன்ற தேர்தலில் பாஜகவிற்கு கிடைத்துள்ள இந்த மகத்தான மற்றும் வரலாற்று சிறப்பு மிக்க வெற்றிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகப் பதிவில் வாழ்த்து தெரிவித்துள்ளார். இவ்வெற்றியை தந்த புதுடெல்லியை சேர்ந்த சகோதர-சகோதரிகளுக்கு தாம் தலை வணங்குவதாகவும் மேலும் பதிவிட்டுள்ளார்.

*எல் முருகன்*

டெல்லி சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள் பிரதமர் திரு நரேந்திர மோடியின் நல்லாட்சிக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார். சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர் 10 ஆண்டுகளாக பொய் உரைகளை மட்டும் கட்டவிழ்த்து ஆட்சியில் இருந்த அரவிந்த கெஜரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சியை மக்கள் முழுமையாக நிராகரித்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த வெற்றிக்காக பாடுபட்ட பிஜேபி தொண்டர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதாகவும் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார். டெல்லி சட்டப் பேரவை தேர்தலில் ஊழலுக்கு எதிராக மக்கள் வாக்களித்திருப்பதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு வீரேந்திர சச்தேவா கூறி உள்ளார். செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்த அவர் ஆம் ஆத்மி கட்சியில் திரு அரவிந்த்

கெஜரிவால், திரு மனீஷ் சிசோடியா உள்ளிட்டோர் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி இருப்பதை சுட்டிக் காட்டினர். ஊழலுக்கு எதிராகவும் சிறந்த நிர்வாகத்திற்காகவும் டெல்லி மக்கள் பிஜேபிக்கு வாக்களித்திருப்பதாக திரு வீரேந்திர சச்தேவா தெரிவித்தார்.

*தர்மேந்திர பிரதான்*

திறன் இந்தியா திட்டத்தை மாற்றி அமைப்பதற்கும் நீட்டிப்பதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்க தக்கது என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் 8 ஆயிரத்து 800 கோடி ரூபாய் செலவில் மாற்றி அமைக்கப்பட்ட திறன் இந்தியா திட்டம் செயல்படுத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். இளையோர் உரிய வேலை வாய்ப்புகளைப் பெற மத்திய அமைச்சரவையின் இந்த நடவடிக்கை உதவிடும் என்றும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார். தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகனும், மத்திய அமைச்சரவையின் இந்த முடிவை வரவேற்றுள்ளார். இளையோரை திறன் மிக்கவர்களாக உருவாக்க வேண்டும் என்பதில் பிரதமர் திரு நரேந்திர மோடி உறுதியுடன் உள்ளதை இந்த முடிவு எடுத்துரைப்பதாக அவர் குறிப்பிட்டார். இதேபோல் தூய்மை பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் பதவிக் காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு மத்திய அமைச்சரவை நீட்டித்துள்ளதும் வரவேற்க தக்கது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

*ஈரோடு*

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தல் வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வரும் நிலையில் திமுக வேட்பாளர் திரு பிசி சந்திரகுமார் 1 லட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் பெற்று தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார். திமுக வேட்பாளருக்கு அடுத்தபடியாக நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் 23 ஆயிரத்து 810 வாக்குகள் பெற்றுள்ளார்.

காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர் திரு ஈவிகேஎஸ் இளங்கோவன் உடல் நலக் குறைவு காரணமாக காலமானதை அடுத்து இத்தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெற்றது.

*பிரதமர்*

பிரதமர் திரு நரேந்திர மோடி பிரான்ஸ் மற்றும் அமெரிக்க நாடுகளில் வரும் திங்கட்கிழமை முதல் அரசுமுறை பயணம்

மேற்கொள்கிறார். பாரீசில் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் பங்கேற்கும் பிரதமர் பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அதிபர் இமானுவேல் மேக்ரானுடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

தொடர்ந்து வரும் புதன்கிழமை வாஷிங்டன் செல்லும் பிரதமர் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்புடன் குடியுரிமை விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

*பரிக் ஷா பே சர்ச்சா*

நாடு முழுவதும் பொது தேர்வு எழுதவிருக்கும் மாணவர்களிடையே பிரதமர் திரு நரேந்திர மோடி 8-ஆவது முறையாக பரிக் ஷா பே சர்ச்சா நிகழ்வில் நாளை மறுநாள் கலந்துரையாடுகிறார். பிரதமரின் இந்நிகழ்வை மாநிலம் முழுவதும் மாணவர்கள் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ள நிலையில் சேலத்தை சேர்ந்த மாணவர்கள் தேர்வு குறித்த அழுத்தத்தை போக்கும் வகையில் பிரதமரின் கலந்துரையாடல் இருப்பதால் இதனை வரவேற்பதாக மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

மாணவ-மாணவிகளின் தேர்வு அழுத்தத்தை போக்கும் வகையில் ஆண்டு தோறும் தேர்வு காலங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி பரிக் ஷா பே சர்ச்சா நிகழ்வில் உரையாற்றி வருவது குறிப்பிடத் தக்கது. இந்த ஆண்டு பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்கள் இக்கலந்துரையாடலில் பங்கேற்க உள்ளனர்.

*மலர் கண்காட்சி*

புதுச்சேரி அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை சார்பில் வேளாண் விழா மற்றும் 35-ஆவது மலர், காய்,கனி கண்காட்சி தாவரவியல் பூங்காவில் நேற்று தொடங்கி நாளை 9-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இக்கண்காட்சியின் தொடக்க விழாவில் கலந்து கொண்ட வேளாண் அமைச்சர் திரு தேனி ஜெயக்குமார் எமது செய்தியாளர்களிடம் பேசுகையில்....................

(வாய்ஸ்)

புதுச்சேரியில் நடைபெற்று வரும் மலர் கண்காட்சியில் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ரயில் எஞ்சின், கிட்டார், பழங்கள் காய்கறிகளால் அலங்கரிக்கப்பட்ட ஆயி மண்டபம், திருவள்ளுவர் சிலை ஆகியவை பொது மக்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

இசை நடன நீர் ஊற்று, வேளாண்மை, தோட்டக்கலை, அதனைச் சார்ந்த நிறுவனங்கள், தங்களின் புதிய கண்டுபிடிப்புகள், விதைகள், உரங்கள், பயிர் பாதுகாப்பு முறைகள், எந்திரங்கள் தொடர்பாக அரங்குகள் அமைக்கப்பட்டு காட்சிபடுத்தப்பட்டுள்ளது.

இக்கண்காட்சி தங்களுக்கு மன அமைதியையும், மகிழ்ச்சியையும் தருவதாக பொது மக்கள் சிலர் தங்களது கருத்துக்களை எமது செய்தியாளர்களிடம் சென்னையைச் சேர்ந்த சுற்றுலா பயணி சந்தியா கூறுகையில்...... (வாய்ஸ்)

வேலூரைச் சேர்ந்த சுற்றுலா பயணி வித்யா கூறுகையில் (வாய்ஸ்)

*இயற்கை பூங்கா*

புதுச்சேரி ரோட்டரி பீச் டவுன் சங்கத்தின் சார்பில் மேட்டுப்பாளையம் போக்குவரத்து முனையத்தில் உருவாக்கப்பட்டுள்ள இயற்கை சுற்றுலா பூங்காவை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று பார்வையிட்டார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் அன்னையின் பெயரில் ஒரு மரம் என்ற திட்டத்தின் கீழ் இயற்கை சுற்றுலாப் பூங்காவில் துணை நிலை ஆளுநர் மரக் கன்று நட்டு வைத்தார். தொடர்ந்து மியா வாக்கி பூங்காவை உருவாக்கி பராமரித்து வருபவர்களை துணை நிலை ஆளுநர் சிறப்பித்தார். அங்கு அமைக்கப்பட்டிருந்த மழை நீர் சேகரிப்பு அமைப்பை பார்வையிட்டு பின்னர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக அங்கு சுவரில் வரையபட்டிருந்த ஓவியத்தின் கீழ் கையொப்பம் இட்டார். மேலும் இப்பூங்காவை நல்ல முறையில் பராமரிக்கவும் புதுச்சேரியின் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில் இதுபோன்ற குறுங்காடுகள் பலவற்றை உருவாக்கவும் கவனம் செலுத்த வேண்டும் என்று ரோட்டரி சங்கத்தினரைக் கேட்டுக் கொண்டு

அவர்களின் இம்முயற்சியினை பாராட்டினார். சங்கத்தின் தலைவர் திரு வினோத் சர்மா, செயலர் பிரகாஷ், திட்ட தலைவர் திரு புருஷோத்தமன் ஆகியோர் உடன் இருந்தனர்.

தலைப்புச் செய்திகள்

30 ஆண்டுகளுக்குப் பிறகு பாஜக புதுடெல்லியில் ஆட்சி அமைக்க உள்ள நிலையில், இந்த வெற்றிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தல் வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வரும் நிலையில் திமுக வேட்பாளர் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார்.

நாடு முழுவதும் பொது தேர்வு எழுதவிருக்கும் மாணவர்களிடையே பிரதமர் திரு நரேந்திர மோடி 8-ஆவது முறையாக பரிக் ஷா பே சர்ச்சா நிகழ்வில் வரும் திங்கட்கிழமை கலந்துரையாடுகிறார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-------------------------